FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

UNDER SECTION 173 BNSS முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 ~~Cr.P.C~~)

BNSS பிரிவு 173 ன் கீழ் (கு.ந.வி.தொ.பிரிவு 154 ~~இன்~~ கீழ்)

C 8081624

04/AC/2025

1. District : மாவட்டம் கரூர் PS: கா.த.க. பிரிவு காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: முத.அ. எண் Date: நாள் 08.10.2025

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION ACT 1988 [AS AMENDED IN 2018] Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7(a)

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 04.10.2025 Date to : நாள் வரை மாலை சுமார் 06.40 மணி தெலுங்கானா மாநிலம்.

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 06.10.2025 Time to : நேரம் வரை காலை சுமார் 10 1/4 மணி மாலை சுமார் 7 1/4 மணி தெலுங்கானா மாநிலம்.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.10.2025 Time : நேரம் 07.00 HRS

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 08.10.2025 Time : நேரம் 07.40 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமான புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 40 கி.மீட்டர் கிழக்கு

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி குளித்தலை

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. லதா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Y. பிச்சைமுத்து

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1979 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் (g) Address : முகவரி 3/114 - A, தங்கா தெரு, காவேரி நகர், குளித்தலை. கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு மீ. ஜெபி ஜார் நல அலுவலர் சமூக நலத்துறை குளித்தலை கரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attac... ...cessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இந்துடன் தனித்தாள் கணினியின் தட்டச்சு செய்து
இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Jothi.
8 - 10 - 2025.

8.10.25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

08.10.2025 AT 06.20 HRS.

Name பெயர் சாகிநாதன்
Rank: நிலை .....No. எண் .....
ஆய்வாளர் மு. த. க. பிரிவு
கரூர்.

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.04/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் K.சாமிநாதன் ஆகிய நான் 08.10.2025 ஆம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது K.லதா க/பெ Y. பிச்சைமுத்து, 3/114 - A , பூங்கா தெரு, காவேரி நகர், குளித்தலை - 639104, கரூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல் K.லதா க/பெ Y. பிச்சைமுத்து, 3/114 - A , பூங்கா தெரு, காவேரி நகர், குளித்தலை - 639104, கரூர் மாவட்டம். பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள் லஞ்ச ஒழிப்பு பிரிவு, கரூர் மாவட்டம். அய்யா, நானும் எனது கணவரும் கரூர் மாவட்டம், குளித்தலை காவேரி நகரில் வசித்து வருகிறோம். எனது கணவர் சமையல் வேலை செய்து வருகிறார். நான் ஆதிதிராவிடர் வகுப்பை சார்ந்தவர். எனது கணவர் பிச்சைமுத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்தவர். நாங்கள் இருவரும் கடந்த 25.11.2022 தேதியன்று கலப்புத்திருமணம் செய்து கொண்டோம். பின்னர் தமிழ்நாடு அரசின் டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு திருமண உதவி திட்டத்தின் கீழ் கலப்பு திருமணம் செய்தவர்களுக்கு வழங்கும் உதவித்தொகை வேண்டி கடந்த 02.05.2024-அன்று இ-சேவை மய்யம் மூலமாக விண்ணப்பித்தேன். அதன் பேரில் கடந்த ஆண்டு கரூர் மாவட்ட சமூக நலத்துறையிலிருந்து திருமதி.பூங்கோதை என்ற ஊர் நல அலுவலர் என்னையும் எனது கணவரையும் விசாரித்துவிட்டு கலப்பு திருமணச்சான்றிதழ், ஆதார் கார்டு நகல், சாதிச்சான்றிழ் நகல் உள்ளிட்ட ஆவணங்களை எங்களிடமிருந்து வாங்கி பார்த்த பின்னர் எங்களுக்கு உரிய தகுதி இருப்பதாகவும், விரைவில் நலத்திட்ட உதவிகள் கிடைக்க பரிந்துரை செய்வதாகவும் தெரிவித்தார். ஆனால் அதன் பின்னர் எந்தவித நடவடிக்கையும் இல்லாததால் நான் அவருக்கு போன் செய்து விசாரித்தபோது, அவர் பணி ஓய்வு பெற்று விட்டதாகவும் அவருக்கு பதிலாக பேபி என்ற மற்றொரு ஊர் நல அலுவலர் எங்களது விண்ணப்பம் தொடர்பான பணிகளை பார்ப்பதாகவும் தெரிவித்தார். இந்நிலையில், கடந்த 21.08.2025-ம் தேதியன்று குளித்தலை அறிஞர் அண்ணா மன்றத்தில் நடைபெற்ற முகாமில் நான் மீண்டும் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்தேன். அப்போது அங்கிருந்த ஊர் நல அலுவலர் திருமதி. பேபி அவர்கள் என்னிடம் உனது விண்ணப்பம் ஏற்கனவே என்னிடம் உள்ளது, எனவே மற்றொரு விண்ணப்பத்தை இப்போது கொடுக்க வேண்டாம், நான் உங்களுக்கு போன் செய்கிறேன் என்று சொல்லி விட்டார். அதன் பின்னர் கடந்த 04.10.2025-ம் தேதி மாலை சுமார் 06.40 மணிக்கு ஊர் நல அலுவலர் திருமதி. பேபி என்பவர் 90925 84407 என்ற எண்ணிலிருந்து எனது செல்போன் எண் 82705 18706-ல் தொடர்பு கொண்டு, உங்கள் கலப்பு திருமண உதவித் தொகை விண்ணப்பம் தற்போது என்னிடம்தான் உள்ளது, நான் விசாரித்துவிட்டு தேவையான

நடவடிக்கை எடுப்பதற்கு தனக்கு ரூ.2,000/- கொடுத்தால் விரைவில் உங்கள் விண்ணப்பத்தை பரிந்துரை செய்து அனுப்புவதாகவும், பணம் ஏற்பாடு செய்த பின்னர் போனில் தொடர்புகொள்ளுமாறும் தெரிவித்து போனை வைத்து விட்டார். என் கணவர் வீட்டுக்கு வந்தவுடன் நான் அவரிடம் விவரம் சொன்னேன். எனவே, கடந்த 06.10.2025-ம் தேதியன்று காலை சுமார் 10¼ மணிக்கு என் கணவர் தனது 75029 70452 என்ற செல்போன் எண்ணிலிருந்து ஊர்நல அலுவலர் திருமதி. பேபி கொடுத்துச் சென்ற 90925 84407 என்ற செல்போன் எண்ணிற்கு அழைத்து கேட்டபோது, திருமதி. பேபி அவர்கள், தபால் அலுவலகத்தில் எங்கள் பெயரில் சேமிப்புக் கணக்கு ஆரம்பித்து அதன் நகல், திருமண புகைப்படம் ஆகியவற்றை தயார் செய்த பின்னர், தான் கேட்ட ரூ.2000/- பணத்துடன் தன்னை வந்து சந்திக்குமாறு கூறினார். மீண்டும் அன்றைய தினம் மாலை சுமார் 7¼ மணிக்கு திருமதி. பேபி அவர்கள் 90925 84407 என்ற எண்ணிலிருந்து எனது செல்போன் எண் 82705 18706-ல் தொடர்பு கொண்டு நான் கேட்ட பணம் என்ன ஆச்சு என்று கேட்டார். நான் அவரிடம் புரட்டாசி மாதம் என்பதால் எனது கணவருக்கு சமையல் வேலை இல்லை என்றும், அன்றாடச் செலவுக்கே கஷ்டப்படுவதால் பணம் புரட்ட இயலவில்லை என்றும் அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் பணம் கொடுக்காவிட்டால் நான் பரிந்துரை செய்ய மாட்டேன், உங்களுக்கு எவ்வித சலுகையும் கிடைக்காது, நான் 07.10.2025-ம் தேதி இனுங்கூர் கிராமத்திற்கு முகாம் பணியாக செல்வதால், 08.10.2025-ம் தேதி குளித்தலை வருவதாகவும், அப்போது தான் கேட்ட பணம் ரூ.2000/-ஐ தன்னிடம் போனில் பேசிவிட்டு நேரில் வந்து கொடுக்குமாறும், அவ்வாறு பணம் கொடுக்காவிட்டால் கலப்பு திருமண நிதி உதவி பெறுவதற்கு பரிந்துரை செய்யமாட்டேன் என்று கண்டிப்புடன் கூறிவிட்டு போனை வைத்து விட்டார். ஆனால் அரசு இலவசமாக வழங்கும் சலுகைகளைப் பெற லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, கலப்பு திருமணம் செய்ததற்காக எங்களுக்கு அரசு வழங்கும் நலத்திட்ட உதவியைப் பெற்றுத் தருவதற்கு ரூ.2000/- லஞ்சம் கேட்கும் குளித்தலை சமூக நலத்துறை ஊர் நல அலுவலர் திருமதி.பேபி அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். திருமதி. பேபி அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2000/- கொண்டு வந்துள்ளேன். மேலும், 02.05.2024-ம் தேதியன்று நான் கொடுத்த விண்ணப்பத்தின் ஒப்புகைச் சீட்டு எண் 2024 0100 000 520 மற்றும் அத்துடன் இணைத்துக் கொடுத்த எங்கள் இருவரின் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, சாதிச் சான்றிதழ், கலப்பு திருமணச் சான்றிதழ் ஆகியவற்றின் நகல்களையும் இத்துடன் இணைத்துள்ளேன். எனவே அவர்மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- XXXXXXXXXX (K.லதா) 08-10-2025.

Sir, Received the complaint on 08.10.2025 at about 07.00 hrs,. A Confidential verification was conducted about the complaint through sources. The complaint was

found to be true and the reputation of the accused was bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.04/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at 07.40 hrs on 08.10.2025. Sd/-(xxxxxxxx) 08.10.2025. K.Saminathan, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original Written complaint of Tmt.K.Latha W/o.Y.Pitchaimuthu, 3/114-A, Park Street, Cauvery Nagar, Kulithalai – 639104, Karur District are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

8/10/25

(K.Saminathan)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.